

# சக்தி பைனான்ஸ் லிமிடெட்

31.3.2013-ம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டில்
கம்பெனியின் செயல்முறைப் பலன்கள் குறித்து
தலைவர் **டாக்டர் ம. மாணிக்கம்** அவர்களது அறிக்கை

**அன்பார்ந்த பங்குதாரர்களே,**

நமது நிறுவனத்தின் 56-ம் ஆண்டு பொதுப் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். சென்ற 31 மார்ச் 2013-ம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளும், இயக்குநர்கள் குழுவின் அறிக்கையும் ஏற்கனவே அனுப்பப்பட்டு உங்களிடம் இருப்பதால், உங்கள் அனுமதியுடன் அவற்றை வாசிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்கிறேன்.

## சிரமமான நிலையில் இந்தியப் பொருளாதாரம்

வெளிநாட்டுச் சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் தேவை போதுமான அளவு வளர்ச்சி அடையாததால், 2012-13ல் பொருளாதாரம் சிரமமான நிலையைக் கடக்க வேண்டி இருந்தது. வெளிநாட்டு வர்த்தகம் திருப்திகரமாக இல்லாததால் நடப்பு கணக்கில் கடுமையான பற்றாக்குறையே நிலவியது. இதன் விளைவாக ஒரு டாலர் ₹ 54.30 என்று ஏப்ரல் 2013-ல் இருந்த ரூபாயின் மதிப்பு 2013 ஆகஸ்டு மாதம் ₹ 68 ஆக சரிவடைந்தது. உள்நாட்டிலும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தேவை குறைந்ததால், பொருளாதார வளர்ச்சியின் எதிர்பார்ப்பு இரண்டு, மூன்று முறை திருத்தப்பட்டு, 2011-12ம் ஆண்டின் வளர்ச்சி விகிதமான 5.2 சதவிகித அளவுக்கு மாறாக, தற்போது 4 சதவிகிதமாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

## விவசாயத் துறையின் சீரிய வளர்ச்சி

உணவு தானியங்கள் மற்றும் பணப்பயிர்களின் அதிகபட்ச விளைச்சலால் விவசாயத்துறை சிறப்பாக செயல்பட்டது மனதிற்கு இதமளிப்பதாகவுள்ளது. இதனால் 2013-14ன் கரீஃப் மற்றும் ரபி பருவ உற்பத்தியின் அளவு திருத்தியமைக்கப்பட்டு உணவு தானியங்களின் மொத்த உற்பத்தி 265 மில்லியன் டன்களாக இருக்கும். கரும்பு சாகுபடியும் சிறப்பாக இருக்கும். பருத்தியின் விளைச்சல், நமது நாட்டு நூற்பாலைகளின் தேவைகளையும், ஏற்றுமதி தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் இருக்கும்.

## தொழில்துறையில் மந்த நிலைமை

மின்சாரம், நிலக்கரி மற்றும் இயற்கை எரிவாயுவின் பற்றாக்குறை காரணமாகவும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தேவை குறைந்ததாலும் தொழில்துறையில் வளர்ச்சியில்லை. எனினும், தற்பொழுது சிலமாதங்களாக முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இதன் காரணமாக மக்களின் பொருட்கள் வாங்கும் திறமை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, பொருட்களின் விற்பனையும் திருப்திகரமாக இருக்கும். மேலும், அரசு முன்பே கூறிய

பற்றாக்குறை நிலைமைகளை சரி செய்வதற்கான முயற்சிகளை எடுத்து வருவதால் தொழில்துறை வளர்ச்சி இனிவரும் மாதங்களில் அதிகரிக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

**வாகனத்துறை வளர்ச்சியில் பின்னடைவு**

நமது நிறுவனம் சார்ந்திருக்கும் வாகனத்துறை 2012-13ல் சிரமமான நிலையிலேயே இருந்தது. முந்தைய ஆண்டின் வளர்ச்சியைக் காட்டிலும் 1.20 சதவிகிதமே விற்பனை அதிகரித்தது. பொருளாதார மந்த நிலை காரணமாக சரக்கு வாகனங்களின் விற்பனை 2011-12ம் ஆண்டின் 8.09 இலட்சம் வாகனங்களிலிருந்து 2 சதவிகிதம் குறைந்து, 2012-13ல் 7.93 இலட்சம் வாகனங்களாக இருந்தது. கன மற்றும் நடுத்தர சரக்கு வாகனங்களின் விற்பனை 2011-12ம் ஆண்டின் 3.49 இலட்சம் வாகனங்களிலிருந்து 23 சதவிகித அளவிற்கு குறைந்து, 2.68 இலட்சம் வாகனங்களாக இருந்தது. ஆனால் சிறுரக வாகனங்களின் விற்பனை 14 சதவிகிதம் அதிகரித்திருந்தது.

தொழில்துறையின் உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்து அதன் மூலம் வாகனங்களின் தேவை அதிகரித்தலையும் மற்றும் வாகனங்களின் ஏற்றுமதி அதிகரித்தலையும் பொறுத்தே 2013-14ல் வாகனத்துறையின் செயல்பாடுகள் அமையும். ஏப்ரல் முதல் ஜூலை 2013 வரையிலான நான்கு மாதங்களில் வாகனங்களின் விற்பனை 2.90 சதவிகிதம் குறைந்துள்ளது இத்துறை இன்னமும் சிரமமான நிலையில் உள்ளதை உணர்த்துகிறது. முக்கியமான வெளிநாட்டுச் சந்தைகளில் வாகனங்களின் தேவைகள் அதிகரித்துள்ளதால் ஏற்றுமதி அதிகரிக்கும் என நம்பப்படுகிறது. விவசாய விளைபொருட்கள் உற்பத்தி அதிகரிப்பு, தொழில்துறையில் உற்பத்தி அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் போன்ற காரணங்களால் உள்நாட்டிலும் வாகன விற்பனை இனிவரும் காலங்களில் அதிகரிக்கும் என்று நம்பிக்கை கொள்ளலாம். எனவே கடந்த சில மாதங்களில் காணப்பட்ட சிரமங்கள் தற்காலிகமானவைகளே என எடுத்துக்கொள்ளலாம்.

**2012 - 13ம் ஆண்டில் நமது நிறுவனத்தின் திருப்திகரமான செயல்பாடுகள்**

நமது நிறுவனத்தின் 2012-13ன் செயல்பாடுகள் திருப்திகரமாக அமைந்துள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிறப்பான செயல்பாட்டின் மூலமாக பல்வேறு தரப்பிலிருந்தும் கிடைத்த மொத்த வருமானம் கடந்த ஆண்டின் ₹ 116.16 கோடிகளிலிருந்து **₹ 128.72** கோடிகளாக அதிகரித்துள்ளது. தவணைமுறைக் கொள்முதல் வருவாய் மட்டுமே ₹ 108.40 கோடிகளிலிருந்து **₹ 117.64** கோடிகளாக அதிகரித்துள்ளது. மேலும், அசையாச் சொத்துக்களின் விற்பனை மூலம் **₹ 1.67** கோடிகள் வருமானம் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டு ₹ 0.08 இலட்சங்களாக இருந்தது. எல்லா செலவுகளுக்கும் பிறகு, இதர வருமானத்தையும் சேர்த்து, தள்ளுபடிக்கு முந்தைய இலாபமானது கடந்த ஆண்டின் ₹ 19.98 கோடிகளுக்கு மாறாக **₹ 24.20** கோடிகளாக அதிகரித்துள்ளது. எல்லா ஒதுக்கீடுகள் மற்றும் கழிவுகளுக்குப் பின் வரிக்கு முந்தைய இலாபமானது கடந்த ஆண்டின் ₹ 17.17 கோடிகளுக்கு மாறாக **₹ 21.33** கோடிகளாக அதிகரித்துள்ளது. இதனால், வரிக்குப் பிந்தைய இலாபமானது கடந்த ஆண்டின் ₹ 11.62 கோடிகளிலிருந்து **₹ 14** கோடிகளாக உயர்ந்துள்ளது. சட்டபூர்வமான ஒதுக்கீடாக **₹ 2.80** கோடிகள் (₹ 2.32 கோடிகள்) ஒதுக்கப்பட்டுள்ளது. குவியல் முன்னுரிமைப் பங்குகளுக்கு இடைக்கால ஈவுத்தொகை கொடுத்ததிற்குப் பிறகு, சாதாரண பங்குகளின் மீது 10 சதவிகிதம் டிவிடெண்ட் அளிக்க இயக்குநர்கள் குழு பரிந்துரை செய்துள்ளனர் என்பதை

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள உபரித் தொகையானது நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், Capital Adequacy Ratio (CAR)வை பலப்படுத்தும் பொருட்டும் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

## 2013-14ம் ஆண்டின் எதிர்பார்ப்புகள்

நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கான நிதிஆதாரங்களை பலவழிகளிலும் திரட்டுவதற்கு முயற்சிப்பதனால், 2013-14ல் நிறுவனத்தின் செயல்பாடுகள் மேலும் சிறப்பாக இருக்கும். நமது நிறுவனத்தின் கடன் பட்டுவாடா ₹ 500 கோடிகளாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மத்திய நிதி மந்திரி மற்றும் நிதிதுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கொண்டுவரும் பல்வேறு நிதிக் கொள்கைகளின் மூலம் பணப்பற்றாக்குறை அகன்று, பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படும் என்று நம்பப்படுகிறது. இந்த முன்னேற்றம் நமது வளர்ச்சிக்கு பெரிதும் ஏதுவாக இருக்கும்.

## நிதிப்பற்றாக்குறையை குறைக்கும் முயற்சிகள்

ஐக்கிய முற்போக்கு அரசானது, நாட்டில் நிலவிவரும் பெரும் நிதிப்பற்றாக்குறை நிலையால் கவலையுற்று அதனை குறைக்கும் பட்சமாக பலவழிகளிலும் முயற்சி செய்து வருகின்றது. அயல்நாட்டு பணவரவை அதிகரிக்கும் வகையிலும், செலவினங்களை குறைக்கும் வகையிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. பெட்ரோல், டீசல் மற்றும் மற்றும் சமையல் எரிவாயு விற்பனை விலைகளில் மாற்றங்களை செய்தல் போன்ற கடினமான முயற்சிகளையும் எடுக்க வேண்டியுள்ளது.

## சூழ்நிலைக்குத் தகுந்தவாறு ரிசர்வ் வங்கியின் கொள்கைகளில் மாற்றம்

ரிசர்வ் வங்கியின் புதிய கவர்னராக பொறுப்பேற்று இருக்கும் திரு. ரகுராம் ஜி. ராஜனின் புதிய கொள்கைகள் மூலம் வங்கித் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் காணலாம். இதனால் அந்நிய நாட்டு வங்கிகள் இந்தியாவில் புதிய வங்கிகள் அமைத்து அதன் மூலம் அந்நிய நாட்டின் முதலீடுகளை அதிகரிக்கும். காப்பீடு மற்றும் ஓய்வூதிய நிதிகள் மூலம் நீண்டகால முதலீடுகள் செய்ய இயலும். வங்கிகளல்லாத நிதி நிறுவனங்களுக்கும் (NBFCs) நிதித்துறையில் ஒரு முக்கியமான பங்கு உள்ளது. இந்த புதிய கொள்கைகளில், வங்கிகளல்லாத நிதி நிறுவனங்களின் வணிக அளவு மற்றும் அந்தஸ்து உயரும் அளவிற்கு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அதிர்ஷ்டவசமாக, வேளாண் அமைச்சகத்திடம் உணவு பொருள் கையிருப்பு அதிக அளவில் உள்ளது. மேலும் தற்போதைய சந்தைப்பருவத்திலும் கொள்முதல் அதிக அளவில் இருக்கும். இதனால் உணவு பொருள் ஏற்றுமதி அதிகரித்து நடப்புக் கணக்கு பற்றாக்குறையானது 87.8 பில்லியன் டாலர்களிலிருந்து 70 பில்லியன் டாலர்களாக குறைய வாய்ப்புள்ளது. இதன் மூலம் பொருளாதாரத்தின் மோசமான நிலையகன்று உள்நாட்டு மொத்த பொருள் உற்பத்தி வளர்ச்சி 5.5 சதவிகிதத்திற்கு உயரக்கூடும்.

எதிர்பாராத செலவினங்கள் அதிகரித்த போதிலும், நிதிப்பற்றாக்குறை கணக்கிடப்பட்ட 4.8 சதவிகிதத்திற்கு மேல் உயராது உன்று மத்திய நிதியமைச்சர் உறுதியளித்துள்ளார். ரிசர்வ் வங்கியின் புதிய கவர்னர் திரு. ரகுராம் ஜி. ராஜனின் புதிய கொள்கை மாற்றங்கள் மூலமும்

வரவு செலவு திட்டத்தில் முதலில் எதிர்பார்த்த அளவிலேயே நிதி நிலையை பராமரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு அதிகரிப்பதற்கான முயற்சிகள் எடுத்துள்ளமையால் டாலர் ஒன்றுக்கு இருந்த ₹ 68 ன் மதிப்பு ₹ 62.24 ஆகக் குறைந்துள்ளது. பம்பாய் பங்குச் சந்தையின் குறியீடும் 20,000 புள்ளிகளைத் தாண்டியுள்ளது. பொருளாதார முன்னேற்ற அறிகுறிகள் ஏற்றுமதியை அதிகரித்து, அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிக்கும். பொருட்களின் தேவை அதிகரிப்பு மற்றும் ரூபாய் மதிப்பு முன்னேற்றம் ஆகியன நடப்பு நிதிப்பற்றாக்குறையை 70 பில்லியன் டாலர்களாக குறைத்து பொருளாதார நிலையில் மெதுவாக முன்னேற்றம் தரும் என்று நம்பப்படுகின்றது.

## நன்றி நவிலல்

இயக்குநர்களின் சார்பாக பங்குதாரர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும், வைப்பு நிதி வைத்திருப்பவர்களுக்கும், வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் மற்றும் நிறுவனத்தின் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது எல்லா முயற்சியிலும் நல்வழிகாட்டி ஆசீர்வாதத்தை அருள வேண்டி அன்னை சக்தியை பிரார்த்திக்கிறேன்.

நன்றி, வணக்கம்.

26 செப்டம்பர் 2013
கோயம்புத்தூர்

**டாக்டர் ம. மாணிக்கம்**
தலைவர்



SAKTHI FINANCE

AN EDIFICE BUILT ON TRUST

*Statement of Chairman* ***Dr. M. MANICKAM***
*on the Company's performance for*
*the year ended 31st March 2013*

**Dear Shareholders,**

It gives me great pleasure to welcome you all to the 56th Annual General Meeting of the Shareholders of the Company. The Directors' Report and the Audited Accounts of the Company for the Financial Year ended 31st March 2013 have been with you for some time and with your permission, I shall take them as read.

## Economy in Difficult Phase

The economy had to pass through a difficult phase in 2012-13 as the demand for goods and services in overseas market was not registering a satisfactory growth. The operations on the foreign trade front were, therefore, not satisfactory and there was also the handicap of a heavy Current Account Deficit. The rupee lost ground considerably and at one stage the rupee dollar rate touched a low of ₹ 68 (August 2013) against ₹ 54.32 (April 2013). The demand for various goods and services in the domestic market was also discouraging and the growth in GDP has been revised downwards on 2 or 3 occasions, the latest revision placing the GDP growth at a low figure of 4% against 5.2% in 2011-12.

## Exemplary Performance of Agriculture

What is heartening is the exemplary performance of Agriculture and a record output of food grains and cash crops in some directions. The initial lower limit in Kharif and Rabi season in 2013-14 has been revised and the total output of food grains alone will be 265 million tons along with ample supplies of sugar cane. The yield of the cotton crop too will be adequate to meet the needs of textile industry and export market.

## Dismal Industrial Scene

Industrial scene has presented a discouraging picture with the total growth almost negative. Only of late there are signs of improvement. The lack of growth is also due to the serious shortage of power, coal and Natural Gas and

also slackening in demand for particular products. The purchasing power of the masses can improve in the changed situation and the off-take of non-durables will be satisfactory. It was of course expected that the pace of growth will improve in the coming months with the Government's efforts to relieve shortages in the vital sectors.

**The Auto Industry Suffers Setback**

The automobile industry whose performance is vital for the operations of your company had a difficult year in 2012-13. During 2012-13, the output of vehicles showed a growth of only 1.20 per cent as compared to last year. Due to the overall slow-down, Commercial Vehicles sales were down 2 per cent during the year 2012-13 at 7.93 lakh units as compared to 8.09 lakh units in the corresponding year 2011-12. Sales of Heavy and Medium Commercial Vehicles dropped by 23 per cent to 2.68 lakh units as against 3.49 lakh units in 2011-12. Light Commercial Vehicles grew at 14 per cent. The trends clearly indicate the reduced activity in domestic market and disappointing export sales were responsible for discouraging performance in 2012-13.

It can be hoped that the performance in 2013-14 will be better only if the expectations of a pick-up in industrial output and sales in the coming months materialize and also an increase in the off-take in the domestic and export markets. In the first four months April-July under reference, sales of all vehicles registered a negative growth of 2.1 per cent indicating that the industry is yet to come out of its dark days. But recent signs are encouraging as export demand may pick up with greater activity in the main export markets. Internally also the off-take will improve with higher agricultural production and likelihood of an increase in Industrial Output in several directions. The data relating to production and sales of all types of vehicles may give room for the impression that the set back experienced in the recent several months will be a passing phase.

**Satisfactory Working Results of Your Company**

As regards the operations of the company for 2012-13, I am happy to inform you that the working results have been satisfactory in spite of various difficulties. The total income is higher at **₹ 128.72 crores** against ₹ 116.16 crores. The hire purchase operations alone fetched **₹ 117.64 crores** against ₹ 108.40 crores and there was an exceptional income on sale of fixed assets of **₹ 1.67 crores** (₹ 0.08 lakhs). After taking into account income from other sources and meeting other expenses, the profit before depreciation is **₹ 24.20 crores** against ₹ 19.98 crores of last year. After providing for depreciation and amortization and other provisions, the profit before tax is **₹ 21.33 crores** against ₹ 17.17 crores of last year.

Profit after taxation is **₹ 14.00 crores** against ₹ 11.62 crores of last year. Transfer to statutory reserve is **₹ 2.80 crores** (₹ 2.32 crores). After paying the interim dividend on preference shares, the dividend on equity capital is maintained at 10%. The available surplus has been conserved with a view to strengthen the Capital Adequacy Ratio (CAR) as it is essential to support envisaged further growth of business.

## Outlook for 2013-14

The performance in 2013-14 can be better as efforts are being made to mobilize larger resources in various ways. It is hoped that the disbursements will rise to ₹ 500 crores. There will be a distinct improvement in the shape of the economy in the later months in the current financial year as new policies are being initiated. With the prospect of a definite bid being made by the Union Finance Minister and Monetary Authorities, the availability of funds will be helpful in improving disbursements for the company.

## Efforts to contain Fiscal Deficit

Since the UPA Government was worried about the emergence of a larger fiscal deficit and there were difficulties in mobilizing sequenced rupee resources in various forms, efforts are being made to increase borrowing in foreign currency and also minimizing expenses. Fresh difficulties were experienced and adjustments have to be made in prices of gasoline, diesel and natural gas.

## RBI's Efforts to Reorient Policies

The new policies of Mr. Raghuram G. Rajan, the new RBI Governor, may bring about a noticeable change in the complexion of the Banking System with objective to attract inflow of foreign funds with the foreign banks operating through wholly owned subsidiaries. Insurance and Pension funds also will be enabled to secure larger long-term funds. The Non-Banking Finance companies (NBFCs) also have a vital role in the Financial Sector. In the new approach, NBFCs also should be helped to grow in stature for having access to larger resources and increase the volume of business. These new policies of the Governor will take shape only over a period.

Fortunately for the Ministry of Agriculture, buffer stocks are at record high levels and procurement operations in the current marketing season again will be brisk. It will be even possible to increase exports also and reduce the Current Account Deficit to $ 70 billion from $ 87.8 billion. It is felt that the worst phase of the economy is being left behind with the agricultural sector again functioning satisfactorily and the GDP may be much better around 5.5%.

In spite of likelihood of unexpected increases in expenses, it is assured by the Union Finance Minister that there will not be any fiscal deficit beyond the estimated 4.8%. The shape of the budget has to be safeguarded at the estimated level and policy changes also are being made with the advent of the new RBI Governor Mr. Raghuram G. Rajan.

Since it was emphasized that new measures will be adopted for bringing about a recovery in the rupee as also in the functioning of the bourses, the rupee dollar rate has rallied to ₹ 62.24 against the low of ₹ 68. The BSE index also has crossed 20,000 levels. Since the economy also is showing signs of improvement, it is hoped that there will be an increase in foreign exchange earnings through exports. With the recovery of the rupee and better demand for various products the Current Account Deficit can be pruned to $ 70 billion as stated above and economy may again be on the growth path, albeit slowly.

**Acknowledgements**

On behalf of the Board of Directors, I wish to convey my sincere thanks to the shareholders, customers, depositors, bankers, financial institutions and employees of the Company.

I pray the Goddess **SAKTHI** to shower Her blessings and guide us in all our endeavours.

26th September 2013 **M Manickam**
Coimbatore Chairman

*Note: This does not purport to be a report of the proceedings of the 56th Annual General Meeting of the Company.*